செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981, கார்த்திகை 21, (9—12—50) புதன்கிழமை { மணி 15

MADRAS

பெரியார், அண்ணு மீது ஜப்தி வாரண்ட்

பெரியாரின் பிரச்சார வேன் ஜப்தி!

30—11—50 வியாழன் இரவு திராவிடர்க் கழகத்துக்குச் சொந்தமான திராவிடர் தலைவர் பெரியார் அவர்கள் பிரச்சாரத்திற்காகச் சென்று வந்துகொண்டிருந்த செவர்லெட் M. D. S 401. காரை, (வேனை) பெரியார் எழுதிய பொன்மொழி வார்த்தைகளின்மீது நடந்த வழக்கில் பெரியார் அவர்களுக்கு அபராதம் ரூ. 700—0—0 கட்டத் தவறினால் ஆறுமாதசிறைவாசம் என்று விதித்த தண்டனை மக்களுக்கு ஞாபகமிருக்கும். பணம் கட்டமுடியாது என்று சிறைசென்ற பெரியார் அவர்களை விடுதலைசெய்துவிட்டு பின்னர் 30—11—50 இரவு கழகத்துக்கு சொந்தமான பிரசார வேனை (காரை) ஜப்தி செய்துள்ளார்கள்.

பாருங்கள்! இதிலே நியாயம் என்ன என்பதை. பெரியார் அவர்களுக்கு அளித்துள்ள தீர்ப்பு அபராதம் ரூ 700—0—0. கட்டத்தவறினால் சிறைவாசம் என்று கண்டுள்ளதேயொழிய, சிறைவாசமும் பணமும்சேர்ந்தல்ல. மேலும் பெரியார் எழுதிய பொன்மொழியை சேர்த்து வேருெருவர் அச்சிட்டு வெளியிட்டமைக்கு கழகத்தின் காரை ஜப்தி செய்வது எங்ஙனம்? பொதுமக்களாகிய வாசகர்களே! நியாயவாதிகளே! நீங்களே தீர்ப்புக்கூறுங்கள். சட்டம் நியாயத்துக்கு கட்டுப்பட்டதல்லவா?

—வீரன்.

ஃ ஃ ஃ ஃ

தி. மு. க. பொதுச்செயலாளர் அறிஞர். C. N. அண்ணாத்துரை அவர்கள் மீது ஏற்கனவே நடந்த ஆரியமாயை வழக்கையொட்டி அளித்த தீர்ப்பில் ரூ 700—0—0 அபராதம் கட்டத்தவறினால், ஆறுமாதம் சிறைவாசம் என்பதே தீர்ப்பு. அபராதம் கட்டமுடியாது என்றே அறிஞர் அண்ணாதுரை அவர்கள் வெஞ்சிறை ஏகினர். சிறைசென்ற 10 தினங்களில் சர்க்கார் சிறையினின்று விடுதலை செய்துவிட்டனர். விடுதலை செய்துவிட்டு அபராத ரூபாயை வசூல் செய்ய அவருக்குச் சொந்தமான பொருள்களை ஜப்தி செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம், வாசகர்களே! தீர்ப்பளியுங்கள். சட்டம் இருட்டறையோ? நீதிக்கு. நியாயத்துக்கு சட்டம் கட்டுப்படாதோ?

—வீரன்.

தயாரகிறது!

"பொய்யாமொழி"

பொங்கல் மலர்.

விபரங்கள் அடுத்த இதழில்!

சென்ற இதழ் தொடர்ச்சி

மகாபாரதம்

வில்லிநரும் விளக்கம்.

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

ஆசிரியர் U. S. இராமசாமிப் பிள்ளை செயங்கோண்டம்.

—:—

முன்பு சந்திரனுடைய புத்திரனாகிய புதன் இளை என்னும் பெண்ணை ஒரு சோலையிற்கண்டு மோகங் கொண்டு அவளைச்சேர்ந்தான் என்று கூறிய செய்யுளைப் பற்றி ஆராய்ந்தோம். இப்போது அடுத்துள்ள செய்யுளில் இந்தப் புதன் இளை என்னும் இருவரும் புரூரவா என்பவனைப் புத்திரனாகப் பெற்றார்கள். என்று குறிப்பிடப்படுகிறது. அதைப்பற்றி ஆராய்வோம்.

அச்செய்யுள்:—

"புதனுமந்த மென்பூவையும் புரூரவாவினைத்தம்
சுதனெனும்படி தோற்றுவித்தனர் அவன் தோன்றி
இதநலம்பெறுமழகினும் திறலினும் இலங்கி
மதனனும் கலைமுருகனும் எனுமபடி வளர்ந்தான்"

இதில் புதனும், அந்த இளை ஒன்னும் பெண்ணும் புரூரவா என்பவனைப் புத்திரனாகப்பெற்றார்கள் என்றும் அந்தப் புரூரவா என்பவன் அழகிலும் வலிமையிலும் முறையே மன்மதனையும் சுப்பிரமணியனையும் ஒத்து வளர்ந்தான் என்றும் கூறப்படுகிறது

இ—ள்: புதனும்-(சந்திரன் புத்திரனாகிய) புதனும் அந்த மென்பூவையும்-மென்மைத்தன்மைவாய்ந்த, (நாகணவாய்ப்பறவையின் மொழிபோன்ற சொற்களையுடைய) அந்த (இளை என்னும்) பெண்ணும், புரூரவாவினை-புரூரவா என்பவனை, தம்சுதன் எனும்படி-தங்களுடைய புத்திரன் என்று (உலகோர்) கூறும்வண்ணம், தோற்றுவித்தனர்-(பெற்று) விளங்கும்படிச் செய்தனர், அவன் தோன்றி-அந்தப்புரூரவா என்பவன் பிறந்து, இதம் பெறும்-(கண்டார்)விரும்புகின்ற, அழகினும்-அழகிலும், நலம்பெறும்-(தம்மைச்சரண் அடைந்தார்) நன்மையைப் பெறத்தக்க, திறலினும்-வலிமையிலும், மதனனும்-(முறையே) மன்மதனையும், கலை-தமிழ்க்கலைக்கே உரிய, முருகனும்-சுப்பிரமணியனையும், எனும்படி-(ஒத்தவன்) என்று கூறுமாறு, இலங்கி-மேம்பட்டு. வளர்ந்தான்-வளர்ச்சியடைந்தான். எ—று.

இ-பு: (சந்திரன் புத்திரனாகிய)புதனும் மென்மைத் தன்மைவாய்ந்த (நாகணவாய்ப் பறவையின்மொழி போன்ற சொற்களையுடைய அந்த (இளை என்னும்) பெண்ணும் புரூரவா என்பவனைத் தங்களுடைய புத்திரன் என்று (உலகோர்) கூறும்வண்ணம் பெற்று விளங்கும்படிச் செய்தனர். அந்தப் புரூரவா என்பவன் பிறந்து (கண்டார்) விரும்புகின்ற அழகிலும் (தம்மைச் சரணடைந்தார்) நன்மையைப்பெறத்தக்க வலிமையிலும் (முறையே) மன்மதனையும் தமிழ்க் கலைக்கே உரிய சுப்பிரமணியனையும் (ஒத்தவன்) என்று கூறுமாறு மேம்பட்டு வளர்ச்சி அடைந்தான் என்பதாம்.

— தொடரும்.

பணக்கார...

A மெத்துசலா (ஜெயங்கொண்டம்)

நமது பொய்யாமொழியில் சிலவாரங்களாக "பணக்காரர்யார்" என்ற சர்ச்சையில் அன்பர்களின் அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன அவற்றில் எதுசரி, எதுசரியல்ல என்று எடைபோட்டுக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல இதுபற்றி நானும் ஒரு பட்டியல்தர ஆசைப்படுகிறேன். உலகத்தில் பணக்காரர்கள் என்று கருதப்பட்டவர்கள் முறையே,

(1) எட்சல்போர்டு, அமெரிக்கா. (2) ஹென்றி போர்டு, அமெரிக்கா (3) எடோர்டு டி. ரோத்ஸைல்டு, பிரஞ்சு. (4) டியூக் ஆவ்(f) வெஸ்ட் மினிஸ்டர், பிரிட்டிஷ் (5) வில்லியம். ஜெர்மனி. கெய்க்வார், பரோடா. (7) சைமன்பாட்டினோ, பொலிவியா. 8. லார்டு ஈவே, பிரிட்டிஷ். (9) ஆகாகான், இந்தியா. (10) நைஜாம், (ஐதராபாத் இப்போதில்லை) (11) டி. வெண்டல், பிரஞ்சு (12) ஜான்ராக்பெல்லர். அமெரிக்கா. (13) லூயிஸ்டிரேபஸ், பிரஞ்சு. (14) பிரிட்ஸ் தெய்சன், ஜெர்மனி, (15) என்யான்ஸாங். சைனா. (16) பிராங்க்ஸ்டெய்ன் லார்ட் கியூபா. (17) பிரெடரிக்பிளிக் ஜெர்மன்

தேசங்களில்.

1 அமெரிக்கா 2 பொதுவுடமைரஷியா 3 இரண்டாங் கெட்டான் ஏழை இந்தியா.

சாமிகளில் பெண்சாமிகள்

1 கல்கத்தாவில் காளி, 2 காசியில் விசாலாக்ஷி 3 காஞ்சியில் காமாக்ஷி 4 மதுரையில் மீனாக்ஷி.

ஆண்சாமிகள்.

1 காசிவிஸ்வேஸ்வரர், 2 கூர்ஜரத்தில் சோமநாதர், 3 தென்னிந்தியாவில் திருப்பதி வேங்கடாஜலபதி.

மதவாரியாக.

1 (பணக்கார)இந்துமதசாமிகள் 2(நடுத்தரம்)கிருஸ்துவசாமிகள், 3 ஏழைசாமிகள் (அல்லாஹ்.)

வருமானத்தில்

அமெரிக்காவில் ஒருவருடைய தினசரிசராசரி வருமானம் ரூ 26—8—0 இந்தியாவில் 0—1—9,

சம்பளத்தில் அதிகம்

இந்தியா. மந்திரிகளுக்கு ரூ, 10000. 8000, 5000, 1500 ஜப்பானில் அதிகச்சம்பளம் ரூ, 800, 700, 400.

பணக்காரப் பத்திரிகை.

டெய்லி ஹெரால்ட் (உலகத்தில்) பம்பாய்க் கிரானிக்கள் (வடநாடு) இந்து, சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், (தென்னிந்தியா).

—தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க

...றந்த மூடர்.

தி. மா. பரமசிவம். திருச்சி

"கல்லாதவன் மூடன்" என்றபழமொழி நமது நாட்டில் வழங்கி வருகின்றது. ஆனால், வள்ளுவர் இதை மாற்றிச் சொல்லுகின்ற விந்தையைக் குறள் நூலிலே காணலாம்.

அறிவில்லாத மக்களைத் திருத்துவதைவிட, அறிவுடைய மக்கள் அறிவில்லாத மக்களைப்போல மாறக் கூடாது என்பதிலேயே வள்ளுவர் முழுக் கவனம் செலுத்துகின்றார்.

கள்ளுண்ணும் கயவனை என்னாளும் திருத்தமுடியாது என்று வள்ளுவர் எண்ணினார். அவனைத் திருத்த முயல்வதும், தண்ணீருக்குள் தீயை நனைத்ததுபோல முடியும்.

குடியால் விளையும் கேட்டினை, குடிகேடன் வீட்டினை இழந்து, வீதிதோறும் அலைந்து படும் பாட்டினைக் கண்ட பிறகாவது, குடியாத மக்கள் குடியின்மேல் தம் ஆசை படியாதவாறு காத்துக்கொள்ள மாட்டார்களா என்றே வள்ளுவர் உள்ளம் எண்ணியிருத்தல் கூடும்.

இதைப்போலவே கற்றறிந்த மக்கள் — பொது மக்களாலே போற்றப்படுகின்ற அளவு புகழைப் பெற்றுள்ள மக்கள் எனப்படுகின்ற — இவர்களின் செயலினை வள்ளுவர் கண்டு கொள்ளுகின்றார்.

"பிறிதொரு உயிரினின்றும் விடுபட்ட புலாலை (மாமிசத்தை) உண்ணுகின்றவன், ஆணைப்பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றவல்ல புதுமைத் திறனைப் பெற்றிருந்தாலும் கொடியனே. அவனிடம் இம்மியளவும் அருள் நிலைக்காது" என்றெல்லாம் மேடையிலே பேசுகின்றவன் வீட்டிலே பசுமாட்டிறைச்சி உண்பதைக் காணுகின்றார் வள்ளுவர்.

"பிற ஆடவரைக் கண்ணாற் காண்பதும் கற்புடைய பெண்ணுக்குத் தீதாகும்" என்று தன்மனைவிக்கு ஓபாது சொல்லுபவன், கண்ட விலைமாதருடன் கூடும் கயமைச் செயலைச் கண்டு வேதனைப்படுகின்றது வள்ளுவனார் உள்ளம்.

"குலமிலான், குறியிலான், ஒருருமிலான், உருவமில்லான், இவ்வண்ணத்தான் என்று இபம்ப ஒண்ணாதே இறைவனை" என்றெல்லாம் தத்துவம் பேசுபவன் "சங்கரனார் உருவத்திற்குத் தங்க அங்கி" அணிவிக்க நிதி திரட்டும் வஞ்சகச்செயலை யெண்ணி நெஞ்சம் கொதிக்கின்றார் பேராசிரியர் வள்ளுவர்.

"முடியாட்சி என்னும் மூடாட்சி ஒழிந்தால் விடியாத இருள் விடிவினில் கடியுமென்றும், படியாத குறை நீங்கிவிடுமென்றும், நடியாதது நடித்து பிடிவாதம் பிடித்த கொள்கையினர்" குடியாட்சி என்ற பெயரால் தடியாட்சிக்கு ஆட்படுத்தும் தகவின்மை கண்டு உள்ளம் தணலாக மாறுகின்றது வள்ளுவப் பெருந்தகைக்கு.

இவ்வகையாக ஊருக்கு 'உபதேசம்' புரிந்து உலுத்தர்களாய் வாழும் கற்றறிந்த மூடர் செயலால் இந்நாடு தாங்கொணாத் துயரடைதல் கண்டு வேதனை கொள்ளும் வள்ளுவர் உள்ளத்தினைக் கண்டு நமக்கும் கலக்கம் உண்டாகின்றது.

உயரிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் மன்பதையின் எண்ணிக்கை குறைந்து, கேட்பார்ப் பிணிக்கும் சொல்வன்மையால்—வாய்வீச்சில் வல்லவராகி, வாழ்க்கையில்—கொள்கைகளுக்குப் புதைகுழி நாடும் புல்லர்களாய் இருப்பவர்கள் எப்படித் திருந்தப் போகின்றார்கள் ?

தீமையென்றறியாமல் பிழை செய்பவர் திருந்துதல் இயலும். தீமையென்று தெரிந்தும், அத்தீமையையும் நன்மைபோல் ஆக்குவதற்கு ஆதாரந்தேடிக்கொண்டிருக்கும் வன்னெஞ்சம் உடையவர்கள் திருந்தவே மாட்டார்களென்று வள்ளுவர் கண்டு கொண்டார்.

இதோ அந்தக் குறள் மணி:

"ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையிற் பேதையார் இல்"

இப் பொன்னுரையைப் பன்முறைப் படியுங்கள். மேற்கூறிய எல்லா கருத்துக்களும் இதனுள் அடங்கியே இருக்கின்றது.

வள்ளுவரைப் போலவே, பாரதியாரும்,

'பிணிகளுக்கு மாற்றுண்டு; பேதமைக்கு மாற்றில்லை'

என்று கூறுகின்றார். ஆகவே, நூற்றுக்கு பத்து விழுக்காடாவது (10°/。) உயரிய கொள்கைகளைக் கடைப்பிடிப்பது நல்லது. கொள்கைப்படி செயலில் ஒழுகும் போது மீளா இடர்ப்பாடும் வரும். அவைகளை நீக்குவது எப்படி என்பதை அடுத்து ஆராய்வோம்.

★

2ம் பக்க தொடர்ச்சி

ஏழைப் பத்திரிகைகள்

விவசாயி. திருச்சி, பொய்யாமொழி ஜெயங்கொண்டம்.

ஆகவே யார்பணக்காரர், ஏழைகள் யார் என்று கண்டுபிடிப்பதைவிட பணக்காரர்கள் தங்கள் செல்வத்தை நாட்டுமக்களுக்கு எல்வாறு பயன்படுத்த வேண்டும். என்ற சர்ச்சையிலீடுபடும்படித் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

★

★ தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் "பொய்யாமொழி"யின் சந்தாதாரராகச் சேர்ந்து வளர்ச்சியடையச் செய்யுங்கள்.

பொய்யாமொழி

ஆசிரியர் ம. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, கார்த்திகை 21 புதன். { மணி 15

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

கெடுப்பதும்—நிலத்தில் வாழ்பவரைப் பெய்யாது கெடுப்பதும், கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதும் — கெட்டவர்க்குத் துணையாய் பெய்து முன்கெடுத்ததைப்போலவே வாழ்விப்பதும் மழை.

பொருட்குறைவால் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து தவிப்போரைப் பொருட் பெருக்கால் செல்வத்திடரில் தூக்கிவிடுதல், வாழ்வுக்கும்,தாழ்வுக்கும் மழையேகாரணம் என்பதாம்.

வகுப்புரிமை.

நம் நாட்டில் ஒரு பெரிய பிரச்னை. வகுப்புவாரி பிரதிநிதித்வம் என்ற ஒரு பெரிய சர்ச்சை. இந்த சர்ச்சை ஏன்? எப்படி? எவ்வாறு? உண்டாயிற்றெனில், ஒன்றேகுலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்த காலத்தில் கம்யூனல், ஜி. ஓ. தேவைப்பட்டதா? இல்லை. பின்னர் நால்வருணம் உயர்வு தாழ்வு தோன்றி, (வேதம்) மறையை படிக்கவேண்டியவன், படிக்கக் கூடாதவன், அருகதையற்றவன் என்ற வகையில், ஏன்! இன்றுங் கூட வேத பாராயணம் செய்ய, வேதம் படிக்க இன்னின்னவர்கள்தான் படிக்க தகுதி பாத்தியமுடையவர்கள் என்று வகைபிரித்து- பிரித்திருப்பது - முன் விதைத்த வகுப்புவாதமல்லவா? எந்நாளில் வகுப்புகள் பலவாய், பலப்பல பிரிவாய் பிரித்து வைக்கப்பட்டதோ அன்றே தாழ்த்தப்பட்டவன், தாழ்ந்தவன், தகுதியற்றவன், என்ற நோய்க்கு விதையூன்றப்பட்டுவிட்டது. அதைத்தான் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்னர்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று வேற்றுமையை ஒழிக்க அசம் நொந்து எழுதினார். அன்றியும் பட்டினத்தடிகள் 'தன் வினை தன்னைச் சுடும்' என்றார். அன்று ஒரு காலத்தில் சிலருக்கு நன்மை பயத்த காரியம் பின்னர் நாளடைவில் கல்வியை மக்களெல்லாம் சமமாய் அடையவும் அ[...] குறிக்கோளுக்கு பயன்படுத்த[...] வாழ்க்கையில் சுகமடைய பெரிய ப[...] தனவந்தர்களும், நிலச்சுவான்தார்களும் எல்லோரும் விருப்பங்கொண்டனர். உத்தியோகம் புருஷ லக்ஷணம் என்ற அந்த விருப்பம் பூர்த்தியடைய எல்லோரும் படிக்கவும், படித்தவுடன் அதற்கு சிலவு செய்த பணங்களின் பிரதிபலன் எல்லோருக்கும் கிடைக்கவுமான அவ்வளவு வேலைக்கு உத்தியோகங்களில்லாததினால் படித்த மக்கள் அதிகமான எண்ணிக்கையும், வேலை இருப்பது கொஞ்சமுமானதால் அதிலே ரேஷன் முறை போல் பங்கிடு தேவைப்பட்டது. அதற்கு எந்த ரேஷன் பங்கீட்டு முறை நடத்தலாம் என்று எண்ணியபோது சிலகாலத்துக்குமுன் ஏற்பட்ட கம்யூனல் ஜி. ஓ. என்ற பங்கீடு முறை உண்டாக்கும் ஒரேவழிதான் சிறந்தது என கருதப்பட்டு ஒரு இரட்டைமாட்டு வண்டியின் இரண்டு மாடுகளில் முன்னால்போகும் மாட்டை இழுத்துப் பிடித்து பின் தங்கியமாட்டை தட்டி ஓட்டி சமப்படுத்துவது போல் ஏன்! நிலமுள்ளவர்களுக்கு B கார்டு கொடுப்பதுபோல் முற்போக்கில்படித்து பல உத்தியோகங்கள் வகிக்கும் இனமக்களை இன மக்களின்பேரால் உத்தியோகங்களையும் அதற்கு தகுதியென்ற படிப்புக்கும், பின் தங்கியவர்களுக்கும் காலேஜ்களில் முதலிடம் தரவேண்டிய நியாயம் ஏற்பட்டது.

தற்காலம் முன்னேறி முதல்படியிலுள்ளவர்கள் மற்றையவர்களும் முன்னேற வாய்ப்பளிக்க எண்ணாமல், குறுகிய நோக்கங்கொண்டவர்களுக்குதவியாக இந்திய அரசியல் நிர்ணய சபையில் போய் சட்டமும் செய்து வைத்து, ஹைகோர்ட்டில் சட்டத்தை காட்டி, கம்யூனல் ஜி. ஓ, செல்லுபடியற்றது என்று ஹைகோர்ட் தீர்ப்பும் சில முற்போக்குவாதிகள் பெற்றுவிட்டார்கள். ஆனால் உண்மையிலேயே இன்று சில முற்போக்கில் வசிக்கிறவர்களைத் தவிர கிட்டத்தட்ட அவர்களால் அவர்களின் பழைய சாஸ்திர இதிகாச புராணங்களால் முன் ஜன்ம பாபத்தால் படிக்கவும், பல மேல்உத்தியோகங்கள்பார்க்க ஏன் 154 இன மக்கள் தங்களுக்கு வாய்ப்பில்லை என்றே கிடந்து விட்டவர்களை நாட்டில் பற்பல இடங்களிலும் கல்விச்சாலைகளை உண்டாக்கி ஏனைய கல்வியில் பிற்போக்கிலிருப்பதை மாற்றி,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று கருதி ஒரு சிலர் துணிந்து அதாவது

…ருந்தால் அல்லது வாக் …ரு…லதான் படிப்புவரும் இல்லையேல் …து இரண்டாமிடம்) வராது என்ற மூடக் கொள்கை…ப முட்டித் தள்ளிவிட்டு எல்லோரும் படிக்க ஆரம்பித்தவுடன் பாரத்த சூத்திரன் குளித்த குதிரை ஆகாதது என்றது போல் ஏகபோகமாய் அனுபவித்த உத்தியோகமண்டலம் மற்றவர்களுக்கும் பங்கு பிரிப்பதில் விகிதாசாரம் வந்துவிட்டது. மேடும் பள்ளமும் சமப்படுத்த மேட்டை வெட்டித்தான் பள்ளத்தை உயர்த்தி சமநிலையடையச் செய்யவேண்டிய பொறுப்பு சமத்வ நோக்கங் கொண்டவர்க்கும் உண்டாகாமல் போவதற்கில்லை.

மேடும் பள்ளமும் அப்படியே இருக்க அயன் படைத்தான் என்பதை அப்படியே நம்பியது அந்தக்காலம். காலத்திற்கேற்ப கருத்தை மாற்றவேண்டும். ஏமாந்த காலத்தில் அநுபவித்த சுகபோக, சுயநல நோக்கம் விடாதுதான், என்செய்வது! இருட்டும், வெளிச்சமும் மாறி, மாறிவருவது சகஜந்தானே வகுப்புகளை வைத்து வாதம் கூடாதெனில் வகுப்பில்லையேல் வாதமில்லை. ஒரு காலத்தில் வகுப்பு பிரிவினை இனங்கள் நலமாய்த் தோன்றிய வகுப்புகள் இன்று தீமை பயக்கின்றன. பழயன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினனே; என்பதற்கேற்ப கோட்பாடுகளால் ஏற்படுத்திய வகுப்பு இனப்பிரிவை உண்டாக்க முயன்று செய்து பிரித்து வைத்தவர்களின் சந்ததியார்களே கால நிலைக்கேற்ப கருத்தை மாற்றி நால்வருணம் காட்டி வளர்த்த இனப்பிரிவை உண்டாக்கும்போது சொன்ன சூழ்ச்சிகொண்ட சாக்திரத்தை முன்னர் செய்த அந்த விபரீதத்தை மக்களிடமிருந்து இனப்பிரிவை நீக்கி ஒன்றுபடுத்தி அதின் தடைக்கல்லாயுள்ளவைகளைத் தகர்த்தெறிந்து வகுப்புகளை ஒழியுங்கள் இனப்பிரிவை அழியுங்கள் பார்ப்பாரும் – பறையரும் வேண்டாமென எடுத்து இயம்புங்கள். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என ஒன்றுபடுத்துங்கள் இதை மற்றையவர்கள் செய்ய முனையுமுன்னமே செய்யத்தவறிவிட்டாலும்பரவாயில்லை செய்யுங்கள் யாரோ, எப்போதோ, ஏனோ, எந்த சுயநலம் கொண்டோ செய்த சதிச்செயலை அம்பலமாக்கி உண்மையை இன்று நிலவும் இனப்பிரிவை, வகுப்புணர்ச்சியை மாய்த்து மறக்கச்செய்யுங்கள் அப்போதுதான் இந்த தீமை ஒழியும். வேறு எந்த முறையாலும் ஒழியாது. ஒருவன் கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்கு கஷாயம் உட்கொண்டால்தீருமா? வகுப்பை வைத்து வாதத்தை ஒழிக்க முடியுமா? பின்னால் வைத்துக்கொள்ளும் பட்டப்பெயருள்ள பிள்ளை, நாயுடு, முதலியார், அய்யர், அய்யங்கார் போன்ற வால்களை மட்டும் நீக்கிவிட்டால் வகுப்பு, இனப்பிரிவு போய்விடுமா

பகவத்கீதையில் கண்ணன் சொன்னபடி எவனொருவன் தான்செய்ததவற்றைகருதிவருந்தி தவற்றைசெய்யாமலிருக்கிறானோ மாற்றித் திருந்துகிறானோ அவனே உண்மை பக்தனாகிறான் என்று சொல்லியதற்கிணங்கவும் எப்படி வெள்ளையன் தான் 200 வருஷம் ஆண்டு பல பலாபலன்களை அனுபவித்துவந்தவன் சுதந்திர எண்ணங்கொண்டுவிட்ட மக்களை இனி அடக்கி ஆளமுடியாது என்றும் அயல்நாட்டு நிர்ப்பந்தத்தால் நோகாமல்விட்டுச்சென்றானோ அதைவிட சுகமான முறையில் கபிலர் காட்டியதுபோல் நால்வகை சாதியிந்நாட்டில் நாட்டினீர் அந்நால்வகை இன்று 48000 வகையாய் பிரிந்துவிட்டது. பிரிந்த இனமானது இனத்தின் பேரால் வகுப்புரிமை கேட்கிறது ஆகவே ஒரே மருந்து இனமில்லை. மேல்வருணம் தோல் வருணமில்லைஎன்று அன்றிருந்தஒன்றிய நிலைக்கு இழுத்துச்செல்லுங்கள். "யாரை? ராமலிங்க அடிகள் கூறியதுபோல் சாதியிலே, மதங்களிலே, சமய நெறிகளிலே, சாத்திரச்சந்தடியிலே, கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்தலைகின்ற நம்நாட்டு மக்களை உதறச்செய்துகொண்டு வாருங்கள். பித்தளை செம்பு போன்ற உலோகங்களிலுள்ளவரை களிம்பு ஏறத்தான் செய்யும். அன்றியும் இத்துடன் அணையாமல் வகுப்புரிமைத்தீ இன்னும் எரியுமானால் (Back ward community) என்ற கல்வியில் பிற்போக்கிலுள்ள 154 சமூகங்களும்வேறு. அய்யர், பிள்ளை, முதலியார் முதலியவர்களையும் வேறுபிரித்து பாக்கி சமூகங்கள் ஒன்றுசேரும், சேர்ந்தால் இன்னும் பல கேடுகள்நேரும். அறிஞர்களே! ஆளவந்தார்களே! அமைச்சர்களே! சாஸ்திர புராண கர்த்தாக்களே! என்ன செய்யப்போகிறீர்கள். வகுப்புவாதத்தை ஒழிக்க. வகுப்புக்களை மாற்றுவீர்களா? பார்ப்போம் பொறுத்திருந்து. ф

பிளிட்ஸ் எழுதுகிறது......!

(உரைநடையாக கேளுங்கள்)

வீரன்: குமரா இந்த வார ஆங்கில பிளிட்ஸ் பத்திரிகையைப் பார்த்தாயா?

குமரன்: இல்லையப்பா என்ன விசேஷம்!

வீரன்: வேடிக்கையப்பாவேடிக்கை நம்பமாகாணத்தில் முன்னிருந்த பிரதம மந்திரி ஓ. பி. ராமசாமி ரெட்டியாரை அதிகப் படிப்பில்லாதவர் என்று ஒரு சிலர் சொன்னார்களல்லவா அவர்களுக்கு சூடு பிறக்கும்படி ஒரு சங்கதி.

குமரன்: என்னப்பா பீடிகை பலமாகப் போடுகிறாய் வீரா எனக்கு கொஞ்சம் அவசரவேலை.

வீரன்: கேள் அந்த விபரீதத்தை மத்தியமாகாண சட்டசபை மெம்பரில் ஒருவரை பார்லிமெண்ட் மெம்பராக தேர்ந்தெடுத்து அனுப்பினார்களாம் அவர் தகுதியைப் பாரப்பாபாரு. அவர் யாருக்கோ மணியார்டர் செய்தாராம் அந்தமணியார்டர் திரும்ப அவரிடமே வந்துவிட்டதாம் அவர்கோபங்கொண்டு போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு எழுதினாராம் தபால் பியூன், தான் அனுப்பிய மணியார்டரை அனுப்பியவரிடம் கொடுக்காமல் திருப்பி என்னிடமே கொடுத்துவிட்டார் என்றும் அதை விசாரித்து பியூனின்பேரில் நடவடிக்கைதேவை என்றும் கோரியிருந்தாராம். போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் மணியார்டர் பூர்த்தி செய்த பாரத்தைப் பார்த்து அந்த பாரத்தில் பணம் யாருக்குபோய் சேரவேண்டுமோ அவருடையவிலாசத்தை எழுதாமல் தன்விலாசத்தை ஷடி இடத்திலும் அனுப்புதல் (Sender's) என்ற இடத்தில் அவர் விலாசத்தையும் எழுதி பூர்த்தி செய்திருந்ததை ஷடி பார்லிமெண்ட்ரி மெம்பருக்கு எழுதி தெரிவித்தனராம். குமரா, வாசகர்களை கவனி எப்படி நம் இந்தியாவில் பார்லிமெண்டரி மெம்பர்கள் என்று தெரிந்துகொண்டார்களா பார் எப்படி நிர்வாகம் நடக்கும். இப்போ என்ன சொல்றே நம்ம ஓ. பி. ஆரைப்பற்றி. வாசகர்களே நீங்களும் சொல்லுங்கள் ... ... !

வீரத் தமிழ் இளைஞன்

ஆ. இராமசாமி

சிறு நாடகம்.

காட்சி 1.

இடம்: செங்குட்டவன் இல்லம்.

உறுப்பினர்: செங்குட்டவனும், தாயும்.

செங்: தாயே! நான் போருக்கு செல்வதில் தங்களுக்கு என்ன தயக்கம்? தமிழர் பரம்பரை வீரம் அது வல்லவே!

தாய்: செங்குட்டவா, தெரியுமடா கண்ணே! ஆனால் போருக்கு செல்ல வேண்டாம். உன் தந்தை நிலை நீ அறிவாயா?

செங்: தெரியுமம்மா! தந்தையை இகழ்ந்துகூறிய சுற்றத்தார்; கோழைபரம்பரை என்ற உற்றார் தந்தையின் வீரத்தை குறித்து பேச வேண்டுமென்றால் நான் போருக்கு சென்றுதான் ஆக வேண்டும்.

தாய்: வேண்டாமடா பிடிவாதம்.

செங்: தாயே! சோழநாட்டு வீர மகளிரின் உள்ளம் சோர்வோ, சோகமோ கொள்ளலாகுமா? தன் தமையனும் கணவனும் மாண்டிருந்தும் தன் ஒரே மகனுக்கு எண்ணெய்தடவி, தலைவாரி 'போர்க்களம் நோக்கிச் செல்க' எனக்கூறிய அஞ்சா நெஞ்சம் படைத்த அன்னையர் பிறந்த நாட்டில் பிறந்தவர்கள் இல்லையா தாங்கள். தன் மகன் போரிலே புறமுதுகிட்டு மாண்டிருந்தால் அவனுக்கு பால்கொடுத்த தனத்தை சிவியெறிவேன் என்று போர்களத்தை நோக்கி வாளெடுத்துச்சென்ற தமிழன்னை வழிவந்த தாங்களா அப்படி கூறுவது?

தாய்: மகனே! போதும், இன்றுதான் நான் உன்னை பெற்றபொழுதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்வயிற்றை புலிகிடந்த வயிறாக நான் கருதுகிறேன். புறநானூற்றை கற்றுணர்ந்த எனக்கு இவைகள் தெரியாதா? என்ன கூறுகிறாய் என்று பார்த்தேன். உன் தந்தை போர்! போர்!! என்று முழக்கமிட்டார். வெற்றிவாளை கையிலெடுத்தார். காடுமேடு எங்கும் அவர்குரல் எதிரொலித்தது. அவரின் தலைமையிலே எண்ணற்ற இளைஞர்கள் திரண்டனர். கண்ணே! போரிலே உனது தந்தை மும்முறை தளபதியாக இருந்து வெற்றிக்கொடி நாட்டினர் ...... ஆனால் நான்காம்முறை சென்றவரை இன்னும் நான் காணவில்லை: வீர சொர்க்கம் அடைந்திருப்பார் என்று கருதினேன் ...... ஆனால் சுற்றத்தார் சிலர் கோழை என்றனர் உனக்காகவே உயிர் வாழ்ந்தேன் (கலங்கிய கண்களுடன்)

செங்: அம்மா! என் கவலைப்படுகிறீர்கள்; என் தந்தை கோழை என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? யாரோ சூழ்ச்சிக்காரர்கள் இடைக்காலத்தில் புகுந்த வஞ்சகர்கள் சூழ்ச்சி என்றல்லவா நான் ஆசிரியர் மூலம்அறிந்தேன் இதோ போர்அழைப்பு முரசொலி கேட்கின்றது. (முரசு ஒலிகேட்கின்றது) மன்னனிடம் உரிமைவாங்கி தளபதியாக சென்று வருகிறேனம்மா!...... விடைகொடுங்கள். (வணங்குதல்.)

தாய். சென்றுவாடா கண்மணி! வெற்றி இன்றேல்... மார்பில்புண் இவைதான் நான் கேள்விப்பட வேண்டும். ஒவ்வொரு காயத்தையும் நான் ஒருநியாக தழும்பாக கருதுவேன்; சென்று வாடா ...வெற்றி முரசு கொட்டிவா! (கட்டி அணைத்தல்)

(திரை)

காட்சி 2.

இடம்: மன்னன் அவை.

உறுப்பினர்: மன்னன்; அமைச்சர்; தூதுவன் செங்குட்டவன் மற்றும் பலர்.

மன்னன்: அன்று சோழநாட்டில் காலடிஎடுத்துவைத்த சேரனின் படையை முறியடித்தோம், குருதியை கொட்டச்செய்தோம்; இரத்தம் வெள்ளம்போல் ஆறெனப் பெருக்கெடுத்தோடியது. நாட்டாசையின் காரணமாக இரத்த வெள்ளத்தைக்காண கண்கூசி போராட்டத்தையும் நிறுத்தினோம் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஒரு நாடோடி பேச்சைக் கேட்டுக்கொண்டு வந்தான் எதிர்த்து போரிட்டோம நாம்! அன்றைய சேரநாதன் மடிந்தான். அவனுக்கு பிறகு நாட்டாசைப்பிடித்து வருகிறான் அனந்தவன்மன்; வரட்டும் நல்லபுத்தி கற்பிப்போம்.

அமைச்சர்: ஆம், மன்னவா! சேரனின் படைகளுக்கும் நம்படைகளுக்கும் அன்று நடந்தபோரில் இருதிறத்தவரும் கடுமையாக போர்புரிந்தனர். போர்வீரர்களின் செங்குருதி மண்ணில் குடம் குடமாக கொட்டியது. தாங்கள் கூறியதுபோன்று இரத்தஆறு ஓடியது; தலைகள் உருண்டன; வெட்டுண்ட கை, கால்கள் சிதறிக் கிடந்தன; தலையற்ற உடல்களை கழுகுகள் கொத்தித்தின்றது; நரிகள் ஊளையிட்டது; சேரன் தோல்வியுற்றான்.

(தூதுவன் வந்து வணக்கம் செலுத்தி......)

தொடரும்

மலர்ந்த வாழ்வு

கே. ஏ அங்கமுத்து

சென்ற வாரத்தொடர்ச்சி.

அன்று மாலை விருந்திற்குபின் உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும் புறப்பட்டுக்கொண்டிருந்தனர் நானும் புறப்பட உத்தேசித்தேன். ஆனால் என் நண்பர் திருவேங்கடம் என்னை தடுத்துவிட்டார். மறு நாள் காபி சாப்பிட்டுவிட்டு ஓய்வாக அமர்ந்திருக்கும்போது பத்மாவை அழைத்து என்னைப்பற்றி பத்மாவுக்கு அறிமுகம் செய்துவைத்தார் திருவேங்கடம்.

என்னைப்பற்றி தெரிந்துகொண்ட பத்மாவின் முகத்தில் புன்சிறிப்பும் மறுமலர்ச்சியும் ஒளிவீசத் தொடங்கிற்று, நான் அன்றுமாலை என் உல்லாசத்திற்காக சற்று உலாவ பார்க்குக்கு சென்ற சமயம் என்னை தேடிப்பார்த்தார். என்நண்பர் திருவேங்கடம், நான் காணவில்லையாதலால் புதுமணத்தம்பதிகள் இருவரும் சினிமாப் பார்க்கச்சென்று விட்டனர். இரவு எட்டு மணிக்கு பார்க்கிலிருந்து வீடு வந்தடைந்தேன். வீட்டில் ஒருவரும் இல்லை. பத்மா மாத்திரம் வீட்டில் இருந்தாள் பத்மா தாயாரும் அயல் வீட்டிற்குச் சென்றிருப்பதாய் பத்மா சொன்னாள். நான் தினசரிப்பத்திரிகை ஒன்றை படித்துக்கொண்டு வீட்டில் ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். வீட்டின் பின்புற புரவடையில் 'தொப்' என்ற சப்தம் கேட்டது, உடனே எழுந்து ஓடிப்போய் பார்த்தேன் பத்மா தண்ணீர்குடம் தாங்கிய வண்ணம் கீழே சாய்ந்திருந்தாள். நான் அருகில் சென்று 'ஆ! பத்மா? ஏன் விழுந்தாய்?' என்று கையைப் பிடித்து மேலே தாங்கினேன். அவள் கையைத் தொட்ட மாத்திரம் என் இதயம் மகிழ்ச்சி பொங்கத் தொடங்கிற்று. என் தோல்போர்த்த நரம்புகள் எல்லாம் காதல் உணர்ச்சிமேலிட்டது. பத்மாவும் ஒருவித இன்ப அனலில் சிக்குண்டவள்போல் எனக்குத்தெரியவந்தது. பத்மா? உன் உள்ளத்தை நான் நன்கு அறிவேன். எழுந்திரு! நீ இஷ்டப்பட்டால் நான் மறுப்பேனா? என்றேன்,

பத்மா துள்ளியெழுந்து, உண்மையாக தாங்கள் என்னை நேசிக்கிறீர்களா? ஆம் கண்ணே நீ இனி என் இதயகீதம். ஆம் ஆண்கள் அவர்கள் சந்தற்பத்திற்காக எது வேண்டுமானாலும் வர்ணிப்பார்கள் கடைசியில் விதவை, கணவனை இழந்த சண்டாளி, முண்டை என்று முடிவுரை கூறி தற்கொலை செய்ய இதுவேவழி என்று வழியும் காட்டிவிடுவார்கள் அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள்ளல்லவே தாங்கள்.........? பத்மா? நான் தமிழன் என் உயிருடன் கலந்தோடும் தூயதமிழ் இரத்தம், உன் போன்ற கன்னிவிதவைகளின் உள்ளம் துயரத்தால் ஊசலாடுவதைப்பார்த்து சகியாத தமிழன் மகன் நான்! வரண்டபாலை வனத்திற்கு இயற்கைக் காட்சி செழிக்க வைக்கவே பிறந்தேன். இப்பொன்நாட்டில் சமூககட்சி பேசும் சதிகாரர்களை சீர்திருத்துவதே நமது கடமை கணவனை இழந்தால் மறுமணம் செய்யக்கூடாது! இளமை ததும்பும் மேனியை நகைபோட்டு அலங்கரிக்கக் கூடாது; அழகிய கையில் வளையல் அணியக்கூடாது! என்ற மூடநம்பிக்கையை முறியடிப்பதே நம்போன்றவர்களுடைய கடமை.

பத்மா! இதுவே நமது நீங்காக்கடமை! பத்மா? இனி கருத்தொருமித்த காதலர்கள் நாம்என்று உணர்ச்சியுடன்பேசி பத்மாவை என் உடலில் சேர்த்து காதல் உலகில் உல்லாசமாக சஞ்சரித்தோம். மணி ஒன்பது கடிகாரத்தில் ஓசை கேட்டது, என் அண்ணன் வந்துவிடுவார்? என்று பத்மா கூறிவிட்டுப்போக முயன்றாள் பத்மா! காலம் நமக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறது. கூடியவிரைவில் உன் அண்ணன் அநுமதிபெற்று நம் இல்வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்கிறேன், என்று சொல்லி பத்மாவும் நானும் விட்டு அறைக்குள் சென்றோம்.

நான் அன்று இரவு முடிந்ததும் மறுநாள் இதைப் பற்றி திருவேங்கடத்தினிடம் எப்படி பேசுவது? என்று யோசனைசெய்தேன். நான் இருக்கும் அறைக்கு திருவேங்கடம் வந்ததும் என்னப்பா, சிந்தனை அபாரமாக இருக்கிறது? என்றார். ஆம், திருவேங்கடம்! முக்கியமான சிந்தனை இச்சிந்தனைதான் என்னை இங்கு இவ்வளவுநாளாய் தங்கவைத்து விட்டது என்றேன்.

என்னப்பா! அப்படி பெரியயோசனை? ஏன் என்னிடம் சொல்லக்கூடாதோ? என்றார். நான் மெதுவாக குரல் தொண்டையை அழுத்தும்வண்ணம் 'மிஸ்டர்! நம் பத்மாவின் விஷயமாகத்தான் இவ்வளவு பெரிய யோசனை' என்றேன். ஆம்; பத்மாவைப்பற்றி என்ன யோசனை? என்றார். தமிழகத்தில்பிறந்த நாம் இன்னும் இதுபோன்ற கன்னிகளை (விதவை) என்று வசைமொழி கூறி வருகிறோம் விதவைகளுக்கு மறுவிவாகம் செய்யாமல் அவர்கள் வாழ்க்கையைப் பாழாக்குகின்றோம். இச்செயல் தமிழகத்தில் தகுமா? எத்தனை கன்னிப் பெண்கள் விதவைகளாய் வாழுகின்றனர். ஆகவே அவர்கள் அணைந்த வாழ்க்கையை மீண்டும் மிளிரச்செய்வது நம்போன்றவர்களின் கடமையல்லவா? என்றேன் உடனே திருவேங்கடம் ஆம், பாலு! நீ கூறுவது நியாயம்தான் எந்த வாலிபன் இதற்கு முன்வருகிறான்? என்றார். உடனே என் உள்ளம் இன்பம்பொங்கி எழுந்தது. நண்பரே! இதோ உன் தங்கை பத்மாவின் வாழ்க்கையை மீண்டும் மிளிரச்செய்ய நான் முன்வருகிறேன் என்றேன்.

திருச்சியில் 2--12--50ல் நடந்த திராவிட..
சுரண்டல் தடுப்பு மாநாட்டில் நிறைவேறிய தீர்மா..ங்கள்

★

1. சென்னையில் நடைபெறும் வடநாட்டுச்சுரண்டல் தடுப்பு மறியலைத்தொடர்ந்து நடத்துமாறு மறியல் கமிட்டியாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
அருப்புக்கோட்டை எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள்

வழிமொழிந்தவர்கள்:
நாகை, என்.பி காளியப்பன் அவர்கள். நீடாமங்கலம் ஆறுமுகம் அவர்கள்.

2. திராவிடரைச் சுரண்டும் முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகைகளை குறிப்பாக வடநாட்டுப் பத்திரிகைளை பகிஷ்கரிக்குமாறு இம்மாநாடு திராவிடர்களைக் கேட்டுக்கொள்கிறது

முன்மொழிந்தவர்:
பட்டுக்கோட்டை, விஸ்வநாதம் அவர்கள்.

வழிமொழிந்தவர்கள்:
ஆம்பூர், பெருமாள் அவர்கள். பெங்களூர் ஏ எம். தர்மு B. A. ஆனர்ஸ் அவர்கள்.

3. வடவர்களால் நடத்தப்படும் கடைகள், கம்பெனிகள் முதலியவைகளைப் பகிஷ்கரிக்குமாறு இம்மாநாடு மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
நாகை, விஜயராகவலு பி. ஏ , பீ. எல். அவர்கள்.

வழிமொழிந்தவர்:
சேலம், ஆர். நடேசன் அவர்கள்.

4. நம்முடைய நாட்டில் கிடைக்கக்கூடிய பொருள்களை வடநாட்டாரிடம் வாங்காதிருக்குமாறு மக்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
திரு, வீராசாமி பி. ஏ. அவர்கள்.

வழிமொழிந்தவர்கள்:
பம்பாய், தொல்காப்பியன் நாகை ஆர். வி. கோபால் அவர்கள்.

5. வடநாட்டாருடைய பாங்கிகள் இன்ஷியூரன்ஸ். கம்பெனிகள் இவைகளுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாதென மக்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்;
காஞ்சிபுரம், சி. பி. ராஜமாணிக்கம் அவர்கள்.

வழிமொழிந்தவர்:
திருவாரூர், யாகூப் அவர்கள்.

6. வடவருக்கு நம்மைக் காட்டிக்கொடுக்க துணிந்துள்ள காங்கிரஸ்காரருக்கு சலவைத் தொழிலாளரும், சவரத்தொழிலாளரும் வேலை செய்யக்கூடாதென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
ஏ. பி ஜனார்த்தனம் எம். ஏ. அவர்கள்.

வழிமொழிந்தவர்:
லால்குடி, செழியன் அவர்கள்.

7. புகைவண்டி நிலையங்களிலுள்ள இந்திப் பெயர்களை நீக்கிவிடுமாறு அரசியலாரை இம்மாடு கேட்டுக்கொள்கிறது. இதுவரையில் சில இடங்களிலிருந்த இந்திப்பெயர்களை அழித்த பொதுமக்களை இம்மாநாடு பாராட்டுகிறது. இனியாராவது இந்திப் பெயர்களை அழிக்கமுற்பட்டால் அதை ரகசியமாய் செய்யலாகாதென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
திரு, சா. குருசாமி அவர்கள்.

வழிமொழிந்தவர்கள்:
திருவாரூர், முத்துக்கிருஷ்ணன் அவர்கள். பட்டுக்கோட்டை டேவிஸ் பி. ஏ. எல். டி.. அவர்கள். ஈரோடு சுப்பையா அவர்கள்,

8. பிராமணாள் என்ற சாதியைக்குறிப்பிடும் பெயர் பலகையுள்ள ஓட்டல்களுக்குச் செல்லாதிருக்குமாறு திராவிடமக்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்:
அறந்தாங்கி துரையரசன் அவர்கள்.

வழி மொழிந்தவர்:
திருவாரூர், திருமதி, சுந்தரலீலா, சிங்கம்.

9. அகதிகள் நம்நாட்டில் வேலையில்லாத மக்களும் ரயில்வேயில் சர்வீஸ் அனுபவம் ஆனவர்கள் ஏராளமானவர்களிருக்க பொன்மலையில் உள்ள ரயில்வே தொழிற்சாலையில் அகதிகள் என்ற பெயரால் வடநாட்டாரை பல நூற்றுக்கணக்கான பேர்களை வேலைக்கு எடுத்துவருவதை குறித்து இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முன்மொழிந்தவர்;
உறையூர், து. பார்த்தசாரதி,

வழிமொழிந்தவர்கள்:
பொன்மலை, வடிவேலு, ஆலத்தம்பாடி. பரிசுத்தம்.

10, மேற்கண்ட பகிஷ்கார முறைகளில் எவ்வித பலாத்காரமும் கூடாதெனப் பொதுமக்களை இம்மாநாடு கேட்டிக்கொள்கிறது.

முன்மொழிந்தவர்;
பார்த்தசாரதி நாயுடு பி. ஏ., பி. எல், அவர்கள்.

வழிமொழிந்தவர்:
சென்னை, தங்கவேலர் அவர்கள் .

பிறப்பு.

—:—

5—12—50 மாலை **6**-மணி சுமாருக்கு திருமதி. கருணாநிதி பாஸ்கரனார் அவர்களுக்கு பெண் மகவு பிறந்து தாயும், சேயும் நலம்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Katcheri Street, Jayankondacholapuram.